**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.458** **நாள்: 09.09.2026**

**மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில், மாதவரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில், இன்று (09.09.2026) மாதவரம் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாதவரம் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள், கால்வாய் மேம்பாட்டுப் பணிகள், நீர்நிலைகளில் ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றும் பணிகள் குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளில் மழைநீரை அகற்ற தேவையான மோட்டார் பம்புகள், தற்காலிக நிவாரண முகாம்கள், மைய சமையல் கூடங்கள், ஆபத்தான மரக்கிளைகளை அகற்றுதல், மின் இணைப்புப் பெட்டிகளை உயர்த்தி அமைத்தல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கைப் பணிகள் குறித்து மாநகராட்சி, சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, இரயில்வே துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உள்ளிட்ட சேவைத் துறைகளுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

மாதவரம் மண்டலத்தில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகளை வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடித்திட வேண்டும். சாலைகளில் உள்ள பள்ளங்களை உடனடியாக சீரமைத்திட வேண்டும். மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மின்சாரத்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட சேவைத்துறைகள் ஒருங்கிணைந்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை பணிகளையும் விரைந்து மேற்கொண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எல்.விஜய் பிரபு, மண்டலக் கண்காணிப்பு அலுவலர் திரு.எஸ்.அருண்ராஜ், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.ஹார்ட்டின் ரோசாரியோ, மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மின்சாரத்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**